# DEPOSITION OF WITNESS

**(Rule 42 and Judicial Form No.53 of Criminal Rules of Practice, 2019)**

**THE SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER SC AND ST (PoA) ACT, SALEM**

**Spl. Sessions Case No.37/2023**

Deposition of Prosecution witness – PW.4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சுருட்டையம்மாள் | Taluk | : | சங்ககிரி |
| Husband's Name | : | குருநாதன் | Calling | : | வேலையில்லை. |
| Village | : | தேவண்ணகவுன்டனூர் | Age | : | 93 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) of the 22nd day of May, 2026.

**1 – 3 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை :**

நான் தேவண்ணகவுன்டனூரில் வசித்து வருகிறேன். அ.சா.1 எனது பேத்தி முறை. என் கணவர் இறந்துவிட்டார். நான் சம்பவயிடத்தில் 70 வருடங்களாக குடியிருந்து வருகிறேன். என் வீட்டில் இருந்த புளியமரம், வாழை மரங்களை ஆஜர் எதிரிகள் சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் வெட்டி விட்டார்கள். அது குறித்து என்னை சாதி பெயரை சொல்லி திட்டி வெட்ட வந்தார்கள். குழந்தைகளின் உணவருந்தும் தட்டில் எதிரிகள் மலத்தை கொட்டிவிட்டார்கள். அது குறித்து நாங்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்தோம். பின்னர் போலிசார் வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் சாலை ஓரம் உள்ள குடிசையில் வசிக்கிறேன். எனக்கு கண் பார்வை குறைவு என்றால் சரிதான். நான் வீட்டில்தான் படுத்திருப்பேன் என்றால சரிதான். என்ன நடந்தது, ஏது நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். அ.சா.1 ராதிகாவும், அவரது கணவரும்தான் என்னை பார்த்துக்கொள்கிறார்கள் என்றால் சரிதான். ராதிகாதான் எனக்கு சொல்வதுண்டுஎன்றால் சரிதான். நான் கட்டிலில் உட்கார்ந்திருப்பேன் எனக்கு சாப்பாடு கொடுப்பார்கள். வெளியே என்னால் போக இயலாது, எனக்கு இயற்கை உபாதைகளை கழிக்க வேண்டும் என்றால் என் பேத்தி அழைத்து சென்று உதவுவார். மீண்டும் அழைத்து வந்து படுக்க வைப்பார். ஒரு நாளுக்கு ஒருவேளைதான் என்னால் சாப்பிட இயலும். இங்கு என் பேத்தியும், அவரது கணவரும் (அ.சா.1 மற்றும் அ.சா.4) ஆகியோர் ஆட்டோவில் அழைத்து வந்தார்கள். போலிசார் என்னை பார்க்கவில்லை, அங்கு போலிசார் வந்துவிட்டு சென்றார்கள். எனக்கு ஒரு காது கேட்காது. எந்த போலிசார் வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனக்கு வெளியே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. என் பேத்தி அ.சா.1க்கு ஆதரவாக நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் சரிதான். என் பேத்தி அ.சா.1 க்கு அரசு கொடுத்த இடத்தில் வீடு கட்டிக்கொண்டிருக்கிறார். நான் சம்பவம் எதையும் பார்க்கவில்லை என்றாலும், என் பேத்தி அ.சா.1க்கு ஆதரவாக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளின் காட்டை ஒட்டிதான் எங்கள் வீடு உள்ளது. எதிரிகள் அவர்கள் தோட்டத்தில் வேலை செய்வது குறித்து எனக்கு தெரியாது. அ.சா.1க்கு வாழைமரங்கள் இருந்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான், அதை அ.சா.1 தான் பராமரித்து வருகிறார்.

எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றாலும், எதிரிகள் எங்களை சாதி பெயரை சொல்லி திட்டவில்லை என்றாலும், போலிசார் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

| |
|---|
| Taken down before me in open court, in the presence of Accused, under my personal direction, interpreted / read over to the witness and admitted by the witness to be correct. |
| Sd/-S. Jeyasingh. |
| Sessions Judge,<br>Special Court for trial of cases under SC and ST (PoA) Act,<br>Salem. |